அரசு தலைமை மின் ஆய்வாளர் அலுவலகம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி,சென்னை-32.

அரசு தலைமை மின் ஆய்வாளர் அவர்களின் செயல்முறை ஆணை
அளிப்பு : திரு. ஞா. ஜோசப் ஆரோக்கியதாஸ், பி.இ., எம்.பி.ஏ.,

செ.மு.ஆ.எண்: 12868/இ2/2023 நாள்: 01.11.2023

பொருள்: பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திருமதி. அ. வித்யா இளநிலை உதவியாளருக்கு பணி நியமன ஆணை வழங்கியது – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. அ.ஆ.(நிலை) எண். 18, தொழில் மற்றும் வேலை வாய்ப்புத் (Q1) துறை, நாள் 23.1.2020.
2. அ.ஆ.(நிலை)எண். 33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு (Q1) துறை, நாள் 8.3.2023.
3. அதமிஆ-ரின் செ.மு.ஆ.எண். 12868/இ2/2023, நாள் 25.7.2023.
4. முமிஆ/கோவை க.எண். 13804/முமிஆ/கோ/அ1/ 2022, நாள் 31.08.2023.

*****

**ஆணை:**

இத்துறையில் மதுரை மின் ஆய்வாளர் அலுவலகத்தில், தலைமைக் கணக்கராகப் பணிபுரிந்த திரு. சு. அழகுதுரை, வாகன விபத்தில் 6.10.2022 அன்று காலமானதைத் தொடர்ந்து, அவரது மனைவி திருமதி. அ. வித்யா-க்கு பார்வை 3-ல் காணும் செயல்முறை ஆணையில் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதியின் கீழ் வரும் இளநிலை உதவியாளர் பதவியில் தற்காலிகப்பணி நியமன ஆணை வழங்கப்பட்டு, முதுநிலைமின் ஆய்வாளர்/கோவை அலுவலகத்தில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணியமர்த்தப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து, தனியர் 18.08.2023 முற்பகல் முதுநிலைமின் ஆய்வாளர்/கோவை அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியேற்றுக் கொண்டார்.

பார்வை 2-ல் காணும் அரசாணையில் வெளியிடப்பட்ட தமிழ்நாடு குடிமைப் பணிகள் (கருணை அடிப்படையில் நியமனம்) விதிகள், 2023-ன் கீழ் விதி எண். 16-ல், நியமன அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, திருமதி. அ. வித்யா, இளநிலை உதவியாளரின் தற்காலிக பணி நியமனத்தை அவர் பணியேற்ற நாளான 18.08.2023 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

இவர் இளநிலை உதவியாளர் பதவியில் மூன்றாண்டு தொடர் பணிகாலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் இருப்பார் எனவும் தகுதிகாண் பருவகாலத்தில் பவானி சாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்படும் இளநிலை உதவியாளருக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

(ஒம்) (திரு. ஞா. ஜோசப் ஆரோக்கிதாஸ்)
அரசு தலைமை மின் ஆய்வாளர்.

/உண்மை நகல் அனுப்பப்படுகிறது/

அ.பா.கிருஷ்ணம்பிள் 3.11.2023
ஆட்சி அலுவலர்.

பெறுநர்: திருமதி. அ. வித்யா, இளநிலை உதவியாளர்,
முதுநிலைமின் ஆய்வாளர்/கோவை மூலமாக.

நகல்: முதுநிலை மின் ஆய்வாளர்/கோவை
(நுனியரின் பணிப்பதிவேட்டில் பணிவரன்முறைப் பதிவுகளைப் பதியவும், நகலினை இணைக்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.) (2 நகல்கள்)

நகல்: இருப்புக்கோப்பு.

மே.கோ./3.11.2023/

முதுநிலை மின் ஆய்வாளர் அலுவலகம்,
கோவை.

மேற்குறிப்பாணை எண்: 13084/அ1/2022 நாள்: 23.11.2023

— உரியவருக்கு சார்வு செய்யப்படுகிறது. —

ப.ஆ. ஜெசெல்வம்
23.11.2023
முதுநிலை மின் ஆய்வாளர்
கோவை

3/3

பெறுநர்:
திருமதி. அ.வித்யா, இளநிலை உதவியாளர்
முதுநிலை மின் ஆய்வாளர் அலுவலகம்,
கோவை.